சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 63/2019

பெயர் திரு. சேகர் நாள். 10.10.2025
த/பெ. ரவிகண்ணு

**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்குச் சொத்து முகையூரில் உள்ளது. அதன் புல எண். 121 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் 90 அடி ஆகும். வழக்கை கௌரி என்பவர் செல்வராஜ் மீது தாக்கல் செய்துள்ளார். வழக்குச் சொத்து பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அவருக்கு எத்தனை மகன்கள் என்றால் அரிகிருஷ்ணன் மற்றும் வேதாசலம் ஆகியோர். அரிகிருஷ்ணனுக்கு வெங்கடேசன் மற்றும் ரங்கநாதன் பிள்ளைகள் ஆவர். வேதாசலத்திற்கு செல்வராஜ் என்பவர் மகனாவார். செல்வராஜிக்கு இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள். வழக்குச் சொத்தை செல்லவராஜ் மற்றும் அவரது பிள்ளைகள் 10ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் சரிதான், ஆனால் அது பொது சொத்து. வழக்குச் சொத்து ஏற்கனவே விற்கப்பட்டது என்றாலும், அதனால் வாதிகள் பாகம் கோர இயலாது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.